தமிழ்நாடு அரசு

சுருக்கம்

சமூக நலம் – அநாதை இல்லங்கள் அமைப்பதற்கும், முதியோர் உடல் ஊனமுற்றோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கு காப்பகங்கள் அமைப்பதற்கும், தெருவில் சுற்றித் திரியும் குழந்தைகளுக்கு இரவில் தங்க இடவசதி செய்து கொடுப்பதற்கும் இலாப நோக்கின்றி மேற்கொள்ள முன்வரும் தனியார் துறையைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக நிலம் அளித்தல் – சில நிபந்தனைகள் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

அரசாணை (பல்வகை) எண்.182 நாள்–4–12–2002

ஆணை:

9.3.2002 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற ஆளுநர் உரையின் போது ஏனையவற்றுடன் கீழ்க்கண்ட அறிவிப்பும் அறிவிக்கப்பட்டது:–

"நமது சமுதாயத்தில் எளிதில் பாதிப்புக்குள்ளாகும் குழந்தைகள், உடல் ஊனமுற்றோர், மூளை வளர்ச்சி குன்றியோர், முதியோர் போன்றவர்களின் நலனில் தனிக் கவனம் செலுத்தப்படும். அநாதை இல்லங்கள் அமைப்பதற்கும், முதியோர் உடல் ஊனமுற்றோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கு காப்பகங்கள் அமைப்பதற்கும், தெருவில் சுற்றித் திரியும் குழந்தைகளுக்கு இரவில் தங்க இட வசதி செய்து கொடுப்பதற்கும் தனியார் துறையை அரசு ஊக்குவிக்கும். மேலும், இலாப நோக்கின்றி இத்திட்டத்தை மேற்கொள்ள முன்வருவோர்க்கு இலவசமாக நிலம் அளிக்கவும் அரசு முன்வரும்."

2. மேற்படி அறிவிப்பு தொடர்பாக, 25.6.2002 அன்று வருவாய்த் துறை செயலாளர், நில நிர்வாக ஆணையர், ஊனமுற்றோர்க்கான மாநில ஆணையர், ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை ஆணையரகத்தின் உதவி இயக்குநர் ஆகியோருடன் நடத்தப்பட்ட கூட்ட முடிவின் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது:

அ) தொண்டு நிறுவனங்களைத் தெரிவு செய்வதற்கான வழிமுறைகள்/அளவுகோல்களை தத்தம் துறைகளுக்கேற்ப சமூக நல ஆணையர், ஊனமுற்றோர்க்கான மாநில ஆணையர், சமூக பாதுகாப்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு சமூக நல வாரியம் மற்றும்

தமிழ்நாடு மகளிர் முன்னேற்றக் கழகம் ஆகியோர் தயார் செய்து அரசுக்கு அனுப்ப வேண்டும்.

ஆ) கிராமப்புறங்களில் இலாப நோக்கின்றி, இத்திட்டத்தைச் செயல்படுத்த முன்வரும் தன்னார்வு தொண்டு நிறுவனங்களுக்கு இலவசமாக நிலம் ஒதுக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படலாம்.

இ) ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மதிப்பிற்கு மிகாத நிலத்தை ஒதுக்கீடு செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கலாம்.

ஈ) நில ஒதுக்கீட்டு அதிகாரம் உடையவரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள, ஏனைய விதிகளுக்குட்பட்டு, நிலம் ஒதுக்கீடு செய்யப்படும்.

உ) நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் (தடை செய்யப்பட்ட பகுதிகள்) உள்ள நிலத்தை தன்னார்வு தொண்டு நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்வது அரசால் முடிவு செய்யப்படும். தனிப்பட்ட நேர்வுகளில் வருவாய்த் துறையுடன் கலந்தாலோசித்த பின்னர் முடிவு எடுக்கப்படும்.

3. மேலே பத்தி 2 இனம் (இ) முதல் (உ) வரை குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வருவாய்த் துறை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. இவ்வரசாணை, வருவாய்த் துறை மற்றும் நிதித் துறைகளின் அலுவல் சாரா குறிப்பு எண்கள் முறையே 54174/LD(V)(1)/2002-1 நாள் 7-11-2002 மற்றும் 730/DS(TK)/2000-1 நாள் 3-12-2002ன்படி வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.கே. காரியாலி,
அரசுச் செயலாளர்

பெறுநர்

சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை-5.
வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5.
சமூக நல ஆணையர், சென்னை-5.
ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர், சென்னை-4.
சமூகப் பாதுகாப்பு இயக்குநர், சென்னை-10.
தலைவி, தமிழ்நாடு சமூக நல வாரியம், சென்னை-35.
தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு
மகளிர் முன்னேற்றக் கழகம், சென்னை-32.

நகல்:
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை செயலாளரின்
தனி செயலர், சென்னை-9.
வருவாய்த் துறை, சென்னை-9.
நிதித் துறை, சென்னை-9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட
(எந.5/எந.6/எந.8) துறை, சென்னை-9.
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட (எந.2) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கா/5-12